. 4 பக்கங்கள் . விலை ரூ. 5





# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936





www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 27.04.2026 • மலர் 04 • இதழ்: 117 • Edition : Nagercoil • 27.04.2026 • Vol : 04 • Issue : 117 • Page : 4 • Rs. 5/-

### “நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க மைல்கல்”:

# கல்பாக்கம் அணுஉலை குறித்து பிரதமர் பாராட்டு

புது டெல்லி ஏப். 27

கல்பாக்கத்தில் அமைந்துள்ள விரைவு ஈனுலை, நிலைமாறு நிலையை அடைந்தது இந்தியாவின் பெருமையை உயர்த்தியுள்ளது என மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மனதின் குரல் நிகழ்ச்சியில் நாட்டு மக்களிடம் இன்று பிரதமர் மோடி ஆற்றிய உரையின் விவரம்: தமிழ்நாட்டின் கல்பாக்கத்தில் அமைந்துள்ள 'விரைவு ஈனுலை' (Fast Breeder Reactor) 'நிலைமாறு நிலையை' (Criticality) அடைந்துள்ளது. 'நிலைமாறு நிலை' என்பது ஒரு அணு உலை முதன்முறையாகத் தனக்குத்தானே இயங்கக்கூடிய அணுக்கருத் தொடர்வினையை வெற்றிகரமாக அடையும் கட்டமாகும். இந்தக் கட்டம், அந்த அணு உலை முழுமையாகச் செயல்பாட்டு நிலைக்குள் நுழைவதைக் குறிக்கிறது.

இந்தியாவின் அணுசக்திப் பயணத்தில் இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல் ஆகும். இந்த அணு உலை முழுமையாக உள்நாட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆற்றலை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல், இந்த ஈனுலை எதிர்காலத்திற்கான புதிய எரிபொருளையும் உற்பத்தி செய்கிறது. இந்தியாவின் அணுசக்தித் திட்டத்திற்கு விலைமதிப்பற்ற பங்களிப்புகளை வழங்கிய விஞ்ஞானிகள் அனைவருக்கும் வாழ்த்துகள். இத்திட்டம் தொழில்துறை வளர்ச்சிக்கும், எரிசக்தித் துறைக்கும், சுகாதாரத் துறைக்கும் பயனளிக்கும்.

இந்தியா காற்றாற்றல் மின்சார உற்பத்தியிலும் முன்னணியில் உள்ளது. காற்றாற்றல் துறையில் இந்தியா சமீபத்தில் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது. இந்தியாவின் காற்றாற்றல் உற்பத்தித் திறன் தற்போது 56 ஜிகாவாட்களைத் தாண்டியிருக்கிறது. கடந்த ஓராண்டில் மட்டும், ஏறக்குறைய 6 ஜிகாவாட் அளவிற்கான புதிய உற்பத்தித் திறன் சேர்க்கப்பட்டுள்ளது. காற்றாற்றல் துறையில் இந்தியா மிகவேகமாக முன்னேறி வருகிறது. காற்றாற்றல் உற்பத்தித் திறனில் உலக அளவில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. குஜராத், தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் உள்ளிட்ட நாட்டின் பல மாநிலங்கள் இத்துறையில் முன்னோடிகளாகத் திகழ்கின்றன. குஜராத் மாநிலத்தின் கட்ச், பாடன் மற்றும் பனஸ்கந்தா போன்ற பகுதிகளில் பிரம்மாண்டமான புதுப்பிக்கத்தக்க காற்றாற்றல் பூங்காக்கள் உருவாகி வருகின்றன. இந்தியாவின் வளர்ச்சிக்குச் சூரிய ஆற்றலும், காற்றாற்றலும் இன்றியமையாதவை.

உலகின் மிகப்பெரிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இந்தியாவில் நடக்கிறது. 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது. அனைத்துத் தகவல்களும் நேரடியாக டிஜிட்டல் வடிவில் பதிவு செய்யப்படுகின்றன. வீடு வீடாகச் செல்லும் கணக்கெடுப்பாளர்கள், அனைத்துத் தகவல்களையும் உள்ளிடுவதற்கு ஒரு மொபைல் செயலியைப் பயன்படுத்துகின்றனர். இதனால் இந்த முறை மக்கள்தொகைக் கணக்கெடுப்பு எளிதாக்கப்பட்டுள்ளது. இது வரை சுமார் ஒரு கோடியே இருபது லட்சம் குடும்பங்களுக்கான கணக்கெடுப்பு முடிக்கப்பட்டுள்ளன. தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது அரசாங்கத்தின் பணி மட்டுமல்ல, அது அனைவரின் பொறுப்பு. இதில் மக்களின் பங்கேற்பு மிகவும் முக்கியமானது. மக்களால் வழங்கப்படும் தகவல்கள் முற்றிலும் பாதுகாப்பானவை, ரகசியமானவை.



'ரன் ஆஃப் கட்ச்' (Rann of Kutch) பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் பருவமழை முடிவடைந்த உடனேயே லட்சக்கணக்கான 'ஃபிளமிங்கோ' பறவைகள் வந்து குவிகின்றன. அந்தப் பகுதி முழுவதும் இளஞ்சிவப்பு நிறமாக மாறிவிடுவதால், அதற்கு 'ஃபிளமிங்கோ நகரம்' (Flamingo City) என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. கட்ச் பகுதி மக்கள் அந்தப் பறவைகளை 'லக்கா ஜி கே பாராதி' என்று அழைக்கின்றனர். தற்போது, கட்ச் பகுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அழகான அடையாளமாக இந்த 'லக்கா ஜி கே பாராதி' பறவைகள் மாறியிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

மூங்கில் துறையில் வடகிழக்கு மாநிலங்கள் வெற்றி அடைந்துள்ளன. ஒரு காலத்தில் சுமையாகக் கருதப்பட்ட மூங்கில்கள், இப்போது வேலைவாய்ப்பு, வணிகம் மற்றும் புத்தாக்கத்திற்குப் புதிய உத்வேகத்தை அளிக்கின்றன. பிரிட்டிஷ் சட்டத்தின்படி, மூங்கில் ஒரு மரமாக வரையறுக்கப்பட்டது, அதனுடன் தொடர்புடைய விதிகள் மிகவும் கடுமையாக இருந்தன. மூங்கிலை எங்கும் கொண்டு செல்வது மிகவும் கடினமாக இருந்தது. அதன் விளைவாக மக்கள் மூங்கில் தொடர்பான தொழில்களில் இருந்து விலகத் தொடங்கினர். எனது அரசாங்கம் 2017ல் சட்டத்தை மாற்றி, மூங்கிலை மர வகையிலிருந்து நீக்கியது.

வடகிழக்குமுழுவதும் மூங்கில் தொழில் துறை செழித்து வளர்ந்து வருகிறது. திரிபுராவின் கோமதி மாவட்டத்தைச் சேர்ந்த பிஜோய் சூத்ரதர் மற்றும் தெற்கு திரிபுராவைச் சேர்ந்த பிரதீப் சக்ரவர்த்தி ஆகியோர் புதிய மூங்கில் சட்டங்களை தங்களுக்கு ஒரு பெரிய வாய்ப்பாகக் கருதி, தங்கள் பணியை தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைத்துள்ளனர். இன்று, அவர்கள் முன்பை விட சிறந்த மற்றும் அதிக மூங்கில் பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள்.

நாகாலாந்தின் திமாபூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மூங்கில் சார்ந்த உணவுப் பொருட்களுக்கு மதிப்புக்கூட்டல் செய்துள்ள பல சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. மூங்கில் மரச்சாமான்கள் மற்றும் கைவினைப் பொருட்களில் பணியாற்றி வரும் 'கோரோலோ கிரியேட்டிவ் கிராஃப்ட்ஸ்' போன்ற குழுக்களும் உள்ளன. சிக்கிமில் உள்ள காங்டாக் அருகே, மூங்கிலிலிருந்து கைவினைப்பொருட்கள், ஊதுபத்திகள், மரச்சாமான்கள் மற்றும் உள் அலங்காரப் பொருட்களைத் தயாரிக்கும் 'லகாஸ்டல் மூங்கில் எண்டர்பிரைஸ் டீம்' சிறப்பாக செயல்படுகிறது. இந்திய தேசிய ஆவணக்காப்பகம் 20 கோடிக்கும் மேற்பட்ட விலைமதிப்பற்ற ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கிப் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்துள்ளது. இந்த ஆவணங்களில், போஜ பாத்ரா குறித்து எழுதப்பட்ட 7ஆம் நூற்றாண்டு கில்கிட் கையெழுத்துப் பிரதிகளும், 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவாரஸ்யமான நூலான சிறிபூவாலயமும் அடங்கும். இந்த ஆவணங்களில், ராணி லட்சுமிபாய் தொடர்பான சில முக்கியக் கடிதங்களும் அடங்கும்; அவை 1857ல் அவர் எடுத்த சில முடிவுகளை வெளிப்படுத்துகின்றன. நேதாஜியின் வாழ்க்கை, ஆசாத் ஹிந்த் ஃபௌஜ் மற்றும் அவரது உரைகள் தொடர்பான பல ஆவணங்கள் உள்ளன.

குழந்தைகள் தங்கள் கோடை விடுமுறையை முழுமையாகக் கொண்டாட வேண்டும். புதிதாக ஏதேனும் ஒன்றைக் கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். கோடைக்காலத்தில் அனைவரும் தங்கள் உடல்நலத்தில் அக்கறை செலுத்த வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.

## நீட் தேர்வுக்கான ஹால்டிக்கெட் இன்று வெளியாகிறது

சென்னை, ஏப். 27

நாடுமுழுவதும் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., சித்தா உள்ளிட்ட மருத்துவ படிப்பில் சேர்வதற்கான 'நீட்' நுழைவுத்தேர்வு அடுத்த மாதம் (மே) 3ந் தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்வை எழுத தமிழகத்தில் 2 லட்சம் மாணவமாணவிகள் உள்பட நாடு முழுவதும் 28 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். தேர்வுக்கான ஏற்பாடுகளை தேசிய தேர்வு முகமை செய்து வருகிறது.



இந்த சூழலில் 'நீட்' தேர்வுக்கான ஹால்டிக்கெட் இன்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இளநிலை நீட் தேர்வுக்கான ஹால் டிக்கெட் நாளை (ஏப்., 27ம் தேதி) வெளியிடப்படும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

இதன்படி தேசிய தேர்வு முகமையின் அதிகாரப்பூர்வ இணையதளமான neet.nta.nic.in ல் நாளை வெளியிடப்படும். இத்தேர்வு எழுத விண்ணப்பித்தவர்கள் இணையதளத்தில் இருந்து தங்களின் விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை பயன்படுத்தி ஹால்டிக்கெட்டை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த ஹால்டிக்கெட்டில் மாணவர்களின் பெயர், பதிவு எண், தேர்வு மையம், தேர்வு மையத்தில் மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் உள்ளிட்டவை இடம்பெற்றிருக்கும். ஹால்டிக்கெட்டை பதிவிறக்கம் செய்து அதில் கூறப்பட்டிருக்கும் விதிமுறைகளை மாணவர்கள் அறிந்து கொள்ளலாம்.

மேலும் தேர்வு எழுத செல்லும் போது தேர்வறைக்கு செல்ல இந்த ஹால்டிக்கெட்டை கட்டாயம் எடுத்து செல்ல வேண்டும். தேர்வு மைய நுழைவுவாயிலில் தேர்வர்களைபலத்தசோதனை செய்த பின்னரே அனுமதிக்கப்படுவார்கள். அதனால் முன்கூட்டியே விதிமுறைகளை கடைப்பிடித்து சென்றால் தேர்வு நாளில் பதற்றமில்லாமல் தேர்வை எழுத எளிதாக இருக்கும் என தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

தின தமிழ்

**நிருபர்கள் தேவை**

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

**தகுதிகள்**

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

## 7 எம்.பி.க்கள் விலகியதற்கு ஆம் ஆத்மி தலைமையே காரணம்

### சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே கருத்து

புதுடெல்லி, ஏப். 27




ஆம் ஆத்மி கட்சி சார்பில் மாநிலங்களவை எம்.பி.யாக பதவி வகித்த ராகவ் சத்தா உள்ளிட்ட 7 பேர் அக்கட்சியை விட்டு விலகி பாஜகவில் இணைந்தனர்.

இதுகுறித்து சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே நேற்று கூறியதாவது: ஜனநாயகத்தில் அரசியல் ரீதியான முடிவுகளை எடுக்கும் உரிமை ஒவ்வொரு தனி நபருக்கும் உண்டு. மூத்த தலைவர்கள் ஏன் கட்சியை விட்டு விலக முடிவு செய்கிறார்கள் என்பது குறித்து, கட்சியின் தலைமைப் பொறுப்பில் (அர்விந்த் கேஜ்ரிவால்) இருப்பவர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

அவர்கள் (7 எம்.பி.க்கள்) ஏதோ ஒரு சிரமத்தை எதிர்கொண்டிருக்க வேண்டும். அதனால்தான் அவர்கள் கட்சியை விட்டு விலகியுள்ளனர். இதற்கு தலைமையின் தவறே காரணம். அந்தக் கட்சி சரியான பாதையில் பயணித்திருந்தால், இவர்கள் கட்சியை விட்டு விலகியிருக்க மாட்டார்கள். இவ்வாறு அவர் கூறினார். கடந்த 2011ல் அன்னா ஹசாரே தலைமையில் நடைபெற்ற ஊழலுக்கு எதிரான இயக்கத்தில் அர்விந்த் கேஜ்ரிவால் முக்கிய பங்கு வகித்தது குறிப்பிடத்தக்கது.




## சுட்டெரிக்கும் வெயில்: ஊட்டியில் குவிந்த சுற்றுலா பயணிகள்



ஊட்டி, ஏப். 27

தமிழகத்தின் பல பகுதிகளில் கடந்த சில நாட்களாகவே வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

குறிப்பாக மதிய நேரங்களில் வெளியில் செல்வதே சவாலாக இருக்கிறது. கொளுத்தும் கோடை வெயில் காரணமாக மக்கள் குளிர்ச்சியான ஊட்டி, கொடைக்கானல், வால்பாறை போன்ற இடங்களுக்கு படையெடுத்து வருகின்றனர்.

பள்ளி மாணவர்களுக்கு பொதுத்தேர்வு முடிந்து தற்போது கோடைவிடுமுறை விடப்பட்டுள்ளது. இதனால் கோடை விடுமுறையை இதமாக கழிக்க நீலகிரி மாவட்டத்துக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவுக்கு வந்த சுற்றுலா பயணிகள் அங்குள்ள மலர் செடிகளை கண்டு ரசித்து அதன்முன்பு புகைப்படம் எடுத்தும் மகிழ்ந்தனர். பூங்காவில் உள்ளபெரியபுல்தரையில் குடும்பத்துடன் அமர்ந்து பேசியும், குழந்தைகளுடன் விளையாடியும் மகிழ்ந்து வருகின்றனர்.

இதேபோன்று ஊட்டி ரோஜாபூங்காவில் குவிந்த சுற்றுலா பயணிகள் அங்கு பூத்து குலுங்கிய ரோஜா பூக்களை கண்டு ரசித்தனர்.

ஊட்டி படகு இல்லத்திலும் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. படகு சவாரி செய்து அங்கு நிலவிய சீதோஷ்ணநிலையை சுற்றுலா பயணிகள் அனுபவித்தனர்.

இது மட்டுமல்லாது தொட்டபெட்டா மலைசிகரம், பைக்காரா நீர்வீழ்ச்சி, பைக்காரா படகு இல்லம், பைன்பாரஸ்ட், கோத்தகிரி நேரு பூங்கா, குன்னூர் சிம்ஸ் பூங்கா மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து சுற்றுலா தலங்களிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது.

சுற்றுலா தலங்களையொட்டி கடைகளில் குவியும் மக்கள் அங்கு தங்களுக்கு பிடித்தமான பொருட்களை வாங்கி செல்கின்றனர்.

சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளதால் ஊட்டியில் பல்வேறு முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. போக்குவரத்தை சீர் செய்யும் பணியில் போக்குவரத்து போலீசார் ஈடுபட்டனர்.

இன்னும் சில வாரங்களில் கோடைவிழா தொடங்கும் என்பதால் சுற்றுலா பயணிகள் வருகை இன்னும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிதறால்

# நாகராஜா கோயில் பால்குட பவனி திரளான பக்தர்கள் பங்கேற்பு



மார்த்தாண்டம், ஏப்.27

சிதறால் மங்கலத்து விளை நாகராஜா சுவாமி கோயில் பிரதிஷ்டை தின வருஷாபிஷேகம் மற்றும் 37 வது ஆண்டு திருவிழா கடந்த 24 தேதி துவங்கி நடைபெற்று வருகிறது தினமும் கணபதி ஹோமம், கலசபூஜை உட்பட பல சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகிறது.

விழாவில் முக்கிய நிகழ்வான பால்குட ஊர்வலம் அம்பலகடை கேளேஸ்வரம் சிவன் கோயிலில் இருந்து துவங்கி நடைபெற்றது இந்த ஊர்வலத்தில் தாலபொலி அணிவகுப்பு, நையாண்டி மேளம், நாதஸ்வரம் அலங்கார வாகனங்கள் புடை சூழ மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் நாகராஜா சுவாமி எழுந்தருளி ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

இந்த ஊர்வலத்தை இந்து கோயில்கள் கூட்டமைப்பு அமைப்பாளர் முருகன் துவங்கி வைத்தார். விரதமிருந்த பக்தர்கள் பால்குடம் எடுத்து ஊர்வலமாக வெள்ளாங்கோடு ,கல்லு நாட்டி, புளிச்சாம்விளைவழியாக நாகராஜா கோயில் சன்னதி வந்தடைந்ததை தொடர்ந்து நாகராஜா சுவாமிக்கு பக்தர்கள் எடுத்து வந்த பால் கொண்டு அபிஷேகம் நடைபெற்றது தொடர்ந்து சிறப்பு தீபாராதனை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். வழி நெடுகிலும் பக்தர்கள் வரவேற்பு அளித்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டத்தில்

# போதிய மழை இன்றி மா விளைச்சல் பாதிப்பு: மா விவசாயிகள் வேதனை

கிருஷ்ணகிரி, ஏப். 27

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் சுமார் 41 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது இதில் மல்கோவா, மீத்தர், பங்கனப்பள்ளி, காதர், பெங்களூர, நிலம் என பல்வேறு வகையான சுவை மிகுந்த மாம்ப பழங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ஆண்டுதோறும் சுமார் 2 லட்சத்து 52 ஆயிரத்து 436 மெட்ரிக் டன் மா உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடு மட்டுமின்றி உள் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இதன மூலமாக மா விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் பயன் பெற்று வந்தனர். இந்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவநிலை மாற்றம் மற்றும் பூச்சி தாக்குதல் உள்ளிட்ட காரணங்களால் மா மகசூல் பாதிக்கப்பட்டு விவசாயிகள் தொடர் வருவாய் இழப்பை சந்தித்து வருகின்றனர். கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் வேப்பனஹள்ளி, தடத்தரை, மாதேப்பள்ளி என மாவட்டம் முழுவதும் போதிய மழை பெய்ததால் மா விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. அறுவடை செய்யவேண்டிய நிலையில் மாங்காய்கள் சிறிய அளவில் காணப்படுவதால் வியாபாரிகள் யாரும் வராததால் கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் பாதிக்கப்பட்டுள்ளது, இது குறித்து வேப்பனஹள்ளி பகுதியை சேர்ந்த மா விவசாயி ஷபியுல்லா கூறுகையில் கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் மா விளாச்சல் அதிகமாக காணப்பட்டது, ஆனால் காய் பிடிக்கும் பருவத்தில் மழை குறைந்துப் போனதால் மகசூல் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் வியாபாரிகள் யாரும் மாங்காய்களை கொள்முதல் செய்ய முன்வராததால் வங்கிகளில் லட்சக்கணகில் கடன் வாங்கி செலவு செய்தும் மழை ஏமாற்றியதால் மாங்காய்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது, ஆகையால் தமிழக அரசு மழை இன்றி பதிக்கப்பட்டுள்ள மா விவசாயிகள் உரிய நிவாரணம் வழங்கி வங்கிகளில் பெற்ற கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய முன் வர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்




பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரியில் 38 வதுபட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதில் நியூடெல்லியில் உள்ள மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பஅமைச்சகத்தின் செயலாளர் கிருஷ்ணன் பட்டதாரிகளுக்கு பட்டங்களையும், பதக்கங்களையும்வழங்கினார்.

# குமரியில் சீசன் நிறைவு தேன் உற்பத்தி பாதிப்பு

## தேன் விவசாயிகள் ஏமாற்றம்



நாகர்கோவில், ஏப்.27

குமரி தேன் உற்பத்திக்கு புகழ்பெற்ற மாவட்டமாகும். இங்குள்ள தேனுக்கு உலகம் முழுவதும் தனி மவுசு உண்டு. மேற்கு தொடர்ச்சி மலை, அடர்ந்த காடுகள் மற்றும் ரப்பர் காடுகள் நிறைந்த பசுமையான கால சூழ்நிலையில் உற்பத்தியாவதால் குமரி மாவட்ட தேனுக்கு உலக மவுசு உண்டு. வனப்பகுதியில் வாழும் பழங்குடியின மக்கள் மற்றும் விவசாயிகள் தேனீக்களை வளர்த்து தேன் உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இதில் பழங்குடி மக்கள் காடுகளில் உள்ள மரங்களில் மலைகளில் இயற்கையாகவே தேனீக்கள் கட்டும் கூடுகளில் இருந்து தேன் எடுக்கின்றனர்.

இங்குள்ள தேன் மருத்துவ குணம் மிக்கது. இதற்கு உள் நாடு மற்றும் வெளி நாடுகளில் அதிக வரவேற்பு உள்ளது. குமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்தை மையமாகக் கொண்டு குழித்துறை, மஞ்சாலுமூடு, முழுக்கோடு, அருமனை, களியல், கடையாலுமூடு, ஆலஞ்சோலை, திற்பரப்பு, பிணந்தோடு, சேக்கல், குலசேகரம், பேச்சிப்பாறை, மலைவிளை, கொட்டூர், சுருளகோடு, தடிக்காரன்கோணம் உள்ளிட்ட பகுதிகளில் ஆண்கள், பெண்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள் என ஏராளமானோர் தேன் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் சீசன் காலங்களில் அண்டை மாநிலமான கேரளாவுக்கு சென்று தேன் உற்பத்தி செய்து வருகின்றனர். குமரி மாவட்டத்தில் சீசன் சரியாக அமைந்தால் ஆண்டுக்கு 5 லட்சம் கிலோ வரை தேன் உற்பத்தியாகும். குமரி மாவட்டத்தில் இருந்து கேரளம் செல்லும் தேனீ வளர்ப்போரால் அந்த மாநிலத்தில் இருந்து சுமார் 25 லட்சம் கிலோ தேன் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் பல கோடி ரூபாய் மதிப்பிலான தேன் சார்ந்த வணிகம் குமரி மாவட்டத்தில் நடைபெறுகிறது.

இந்த நிலையில் நடப்பாண்டில் அதிக பனிப்பொழிவு மற்றும் பிப்ரவரி மாதத்தில் மலையோர பகுதிகளில் இயல்பை விட கூடுதல் மழை பெய்ததன் காரணமாக தேனீக்களால் அதிகளவில் தேனை சேகரித்து கூடுகளில் சேமிக்க முடியாத நிலை ஏற்பட்டதாக தேனீ வளர்ப்போர் கூறுகின்றனர். இதனால் இம்மாதம் சீசன் முழுமையாக முடிந்த பின்னரும் தேன் உற்பத்தி 50 சதவீதத்திற்கும் கீழ் குறைந்து விட்டது என தேனீ வளர்ப்பு விவசாயிகள் வருத்தத்துடன் தெரிவித்தனர். இதனால் பெருத்த இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கூறினர்.

குளச்சல் அருகே

# கப்பல் ஊழியரை தாக்கிய 2 பேர் மீது வழக்கு

குளச்சல் ஏப். 27

குளச்சல் அருகே ரீத்தாப் ரம் பகுதியை சேர்ந்தவர் பென்னட் சிங் (42). கப்பலில் வேலை பார்த்து வருகிறார். கடந்த சில தினங்களுக்கு முன்பு விடுமுறையில் ஊருக்கு வந்துள்ளார். இவரது நண்பர் ஆசீர் நேசராஜ் என்பவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்துள்ளார். இதனால் பென்னட்சிங் அவரது மற்றொரு நண்பருடன் ஆசீர் நேசராஜை பார்த்து உடல் நிலை குறித்து விசாரிக்க பைக்கில் சென்றுள்ளார்.

ஆனக்குழி என்ற பகுதியில் செல்லும் போது பாலப்பள்ளம் பகுதியை சேர்ந்த ரோனிஸ் மற்றும் இருவர் சேர்ந்து பென்னட் சிங்கையும் நண்பரையும் தடுத்து நிறுத்தி தகராறு செய்து, தாக்கி கொலை மிரட்டல் விடுத்து சென்றுள்ளனர். இதில் படுகாயம் அடைந்த பென்னட் சிங்கும் நண்பரும் அந்தப் பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிகிச்சை பெற்று வருகிறார்கள். புகாரின் பேரில் குளச்சல் போலிசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

நாகர்கோவிலில்

# கஞ்சா பொட்டலத்துடன் 2 பேர் கைது; பைக் பறிமுதல்

நாகர்கோவில், ஏப். 27

நாகர்கோவில்மதுவிலக்குபிரிவுசப்இன்ஸ்பெக்டர் ரவிச்சந்திரன் தலைமையில் ராமன்புதூர் சந்திப்பு பகுதியில் போலீசார் நேற்று வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக 2 வாலிபர்கள்பைக்கில்வந்தனர்.அவரிடம்விசாரணை நடத்திய போது முன்னுக்கு பின் முரணாக பேசினார்கள். இதை அடுத்து அவர்களிடம் நடத்திய சோதனையில் 40 கிராம் கஞ்சா பொட்டலம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து பைக் கஞ்சா முதலியவற்றை பறிமுதல் செய்து பிடிபட்ட இரண்டு பேரையும் காவல் நிலையம் கொண்டு சென்று விசாரித்தனர்.

விசாரணையில் அவர்கள் நாகர்கோவில் தட்டான் விளையை சேர்ந்த அபினேஷ் (21), வெள்ளமடம் நிகேஷ் குமார் (21) என்பது தெரிய வந்தது. இவர்கள் இருவரும் பெயிண்டர்கள் ஆவார்கள். இருவரையும் கைது செய்து போலீசார் ஜாமீனில் விடுவித்தனர். இவர்களுக்கு கஞ்சா எங்கிருந்து கிடைத்தது என்பது தொடர்பாகஅவர்களின்செல்போன்அழைப்புகளின் அடிப்படையில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் இருவரின் வீடுகளிலும் சோதனை நடத்தினர்.




# துறையூர் அருகே ஏரியில் பற்றி எரிந்த காட்டுத்தீ

திருச்சி, ஏப். 27

துறையூர் அருகே உள்ள செல்லப்பாளையம் ஏரியில் நேற்று மதியம் திடீரென கருவேல மரங்களுக்கு அருகில் இருந்த முட்செடிகள் தீப்பிடித்து எரிந்தன. இந்த தீ மளமளவென பரவி சுமார் 100க்கும் மேற்பட்ட கருவேல மரங்களை அழித்தது. இடத்திற்கு உப்பிலியபுரம் தீயணைப்பு நிலைய அலுவலர் துரைசாமி தலைமையிலான தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சுசீந்திரம்

# தாணு மாலைய சுவாமி கோவிலில் இன்று தெப்பத் திருவிழா



சுசீந்திரம், ஏப். 27

பழமையான கோவில்களில் சுசீந்திரம் தாணு மாலைய சுவாமி கோவில் ஒன்றாகும் இந்தக் கோவிலில் வருடம் தோறும் சித்திரை தெப்பத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கி 10 நாட்கள் வெகு விமர்சையாக கொண்டாடப்படுவது வழக்கம் அதுபோல இந்த ஆண்டு சித்திரை தெப்பத் திருவிழாவிற்காக கடந்த 18ஆம் தேதி காலை 11:00 மணி அளவில் கொடியேற்றுத்துடன் திருவிழா துவங்கியது காலை மாலை வேளைகளில் அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் வாகனப்பவனியும் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது எட்டாம் திருவிழாவான நேற்று முன்தினம் காலை 5 மணிக்கு சிதம்பரேஸ்வரர் திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் காலை 10 மணிக்கு அலங்கார மண்டபத்தில் வைத்து நடராஜ மூர்த்திக்கும் சிவகாமி அம்பாளுக்கும் அஷ்ட்டாபிஷேகமும் அதுபோல மாலை ஐந்து முப்பது மணிக்கு அலங்கார மண்டபத்தில் வைத்து நடராஜ மூர்த்திக்கும் சிவகாமி அம்பாளுக்கும் அஸ்ட்டாபிஷேகம் நடைபெற்றது இரவு ஏழு முப்பது மணிக்கு சிதம்பரேஷ்வரர் திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் இரவு ஒன்பது முப்பது மணிக்கு பறங்கி நாற்காலி வாகனத்தில் சுவாமி அம்பாள் திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் நடைபெற்றது ஒன்பதாம் திருவிழாவான நேற்று காலை 6 மணிக்கு இந்திர வாகனத்தில் மகாவிஷ்ணு அம்பாள் திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் காலை எட்டு முப்பது மணி அளவில் விநாயகர் தேர் சப்பரத்தேர் அம்மன் தேரில் அலங்கரிக்கப்பட்ட விநாயகர் சுவாமி அம்பாள் கோவிலை ஒரு முறை சுற்றி வலம் வரும் தேரோட்ட நிகழ்ச்சி நடைபெற்றது இதில் உள்ளூர் மட்டுமின்றி வெளியூர்பக்தர்களும் பெருமளவு கலந்து கொண்டனர் மாலை 6 மணிக்கு சுவாமி மண்டகப்படிக்கு எழுந்தருளல் நிகழ்ச்சியும் இரவு 12 மணிக்கு சப்த்தாவர்னம் நடைபெற்றது இன்று பத்தாம் திருவிழாவை முன்னிட்டு இரவு 8 மணி அளவில் அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் சுவாமி அம்பாள் பெருமாள் ஆகியோர் தெப்பக்குளத்தை சுற்றி மூன்று முறை வலம் வரும் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது இரவு 12 மணிக்கு திரு ஆறாட்டு நடைபெறும் விழா ஏற்பாடுகளை கோவில்களின் இணை ஆணையர் ஜான் சிராணி கோவில் மேலாளர் ஆறுமுகதரன் கணக்கர் கண்ணன் மற்றும் தாணு மாலய சுவாமி கோவில் பக்தர்கள் இணைந்து செய்து வருகின்றனர்



அகஸ்தீஸ்வரம் அருள்மிகு ஸ்ரீ முத்தாரம்மன் அம்மன் திருக்கோவில்

# சித்திரை திருவிழா திருக்கொடியேற்றம் விஜய்வசந்த் எம்பி பங்கேற்பு

கன்னியாகுமரி, ஏப். 27

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் இந்து நாடார் சமுதாய வகை அருள்மிகு குலசேகர விநாயகர் அறநிலையத்திற்குட்பட்ட திருக்கோயில்களில் சித்திரைப் பெருந்திருவிழா சித்திரை மாதம் 11ம் தேதி முதல் 23 வரை (24.04.2026) முதல் (06.05.2026 ) வரை நடைபெறுகிறது.

அகஸ்தீஸ்வரம் அருள்மிகு ஸ்ரீ முத்தாரம்மன் அம்மன் திருக்கோவில் சித்திரை திருவிழா திருக்கொடியேற்றத்துடன் தொடங்கியது. காலை 4:00 மணிக்கு மஹா கணபதி ஹோமம் நடைபெற்றது. அதனைதொடர்ந்துகாலை 7:30மணிக்கு திருக்கொடியேற்றம் நடைபெற்றது. 10 நாட்கள் நடைபெறும் இந்த திருவிழாவில் அம்மனுக்கு தினமும் சிறப்பு பூஜைகள் பல்வேறு அலங்கார தீபாராதனை நடைபெறுகிறது . 8 ம் திருவிழா அன்று அம்மன் குதிரையில் பரிவேட்டை செல்லும் நிகழ்வும், நிறைவு நாளான 11 ம் திருவிழா அன்று பிற்பகல் 2 மணிக்கு அம்மன் பூத வாகனத்தில் ஊர்வலம் வரும் நிகழ்வும், மாலை 6:00 மணிக்கு ஊஞ்சல் உற்சவம் நடைபெறும்.

இந்த கொடியேற்ற நிகழ்வில்

கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர்விஜய் வசந்த் எம்பி, கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். மேலும் ஊர் பொதுமக்கள், பக்த கோடிகள் பலர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்

நிகழ்ச்சியில் காங்கிரஸ் மாநில செயலாளர் வழக்கறிஞர் சினிவாசன், அறங்காவலர்கள் மணி, கருணாகரன், இராஜா சுந்தரபாண்டியன், சினிவாசன், கோகுல கிருஷ்ணன், பொருளாளர் சுயம்புலி ங்கம், கணக்கர் ராஜசேகர், அரோக்கியராஜன், கிங்ஸிலின், அருண் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கரந்தை சத்யநாராயண சித்தர் ஆசிரமத்தில்

# ஆயில்ய வழிபாட்டு நிகழ்ச்சி



தஞ்சாவூர் ஏப்ரல் 27

தஞ்சாவூர் அடுத்துள்ள கரந்தை சத்ய நாராயண சித்தர் ஆசிரமத் தில் மாதந் தோறும் நடைபெறும் வழிபாட்டை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது

வழிப்பாட்டு குழு தலைவர் யோகம் செழியன் தலைமையில் நடைபெற்றது . விழாவில் திருபுவனம் ஆதிசக்தி பீடம் நிறுவனர் அருள் கண்ணன் அடிகள் ஆசி உரை வழங்கினார்.

கண் மருத்துவர் சிவ விக்னேஷ் முன்னிலை உரையாற்றினார். நிகழ்வில் சுந்தரி செழியன் கோவை பால ரிஷி பீடம் நிறுவனர் பாலரிஷி மற்றும் மதுக்கூர் ராஜ சேகர்சித்தர் கண்ணன் அடிகள் ஆகியோருடன் தனக்கு ஏற்பட்ட அனுபவ பதிவுகளை உரையாற்றி னார்

விழாவில் தென்னங்குடி சண்முக சுந்தரம் ,ஆண்டிமடம் ரேவதி சத்யநாராயணன், பேராசிரியர் கஸ்தூரி நாகராஜன், விமலா ராமதாஸ் புருஷோத்தமன், மதுரை கோவிந்த ராம்,

இயக்குனர் மணிவாசகன், திருவேதுகுடி பாலதுரை அரசன், திருவையாறு கலைச்செல்வன், சுப்பிரமணியம் வடுவூர் மணிபாலா வழக்கறிஞர் சுந்தர் ஆசிரியர் அமர்நாத், பேராசிரியர் பாலகிருஷ்ணன் புவனேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

விழாவினை திருச்சி வானொலி நிலைய செய்தி வாசிப்பாளர் ஜெய் கீதா தொகுத்து வழங்கினார் நிறைவில் ஆயில்ய வழிபாட்டுக் குழு செயலாளர் கவிஞர் ராகவ் மகேஷ் நன்றி கூறினார்



## அரூரில்

# குடிநீர் கேட்டு காலி குடங்களுடன் பொதுமக்கள் சாலை மறியல்

தருமபுரி ஏப்ரல் 27

தருமபுரி மாவட்டம் அரூர் ஒன்றியம் வேடகட்டாடு ஊராட்சியில் டி. அம்மாபேட்டை கிராமத்தில் சுமார் 500 க்கும் மேற்பட்ட குடியிருப்புகளில் 1,300 க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்களுக்கு கடந்த சில நாட்களாக குடிநீர் சரிவர விநியோகிக்கப்படவில்லை என கூறப்படுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் சிரமம் அடைந்து வந்தனர். இந்த நிலையில் டி. அம்மாபேட்டையில் உள்ள திருவண்ணாமலை சாலையில் காலிக்குடங்களுடன்அவர்கள்மறியலில் ஈடுபட்டனர். இது குறித்து தகவல் அறிந்த அரூர் போலீசார் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அங்கு விரைந்து வந்தனர். தொடர்ந்து அவர்கள்மறியலில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அதில் குடிநீர் தொட்டி ஆப்ரேட்டர் உடல் நலக்குறைவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் புதிய ஆப்டர் நியமிக்கப்பட்ட பின்னர் குடிநீர் வினியோகம் சீராகம் என உறுதியளித்தனர். இதை அடுத்து பொதுமக்கள் மறியலை கைவிட்டு கலந்து சென்றனர். இதன் காரணமாக அப்பகுதியில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## நாகர்கோவிலில்

# நர்சிங் கல்லூரி மாணவருக்கு வெட்டு

### ஆட்டோ டிரைவர் மீது வழக்கு

நாகர்கோவில், ஏப். 27

நாகர்கோவில், வடசேரி பகுதியை சேர்ந்தவர் அர்ஜுனன் (50). ஆட்டோ டிரைவர். இவருக்கும் தற்போது புத்தேரி, குறிஞ்சி நகர் பகுதியில் வசிக்கும் பெண் ஒருவருக்கும் பழக்கம் இருந்து வருவதாக தெரிகிறது. இந்தப் பெண்ணுக்கு திருமணம் ஆகி 19 வயதில் மகன் ஒருவர் உள்ளார். மகன் நாகர்கோவிலில் உள்ள ஒரு நர்சிங் கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வருகிறார்.

கடந்த 24ஆம் தேதி இரவு அர்ஜுனன் அந்தப் பெண்ணின் வீட்டிற்கு சென்றுள்ளார். வீட்டிலிருந்து அவர் வெளியே வரும் போது அந்த பெண்ணின் மகன் எதிர்பாராத விதமாக வந்துள்ளார். அர்ஜுனனை பார்த்ததும் எங்கள் வீட்டிற்கு ஏன் அடிக்கடி வருகிறாய்? என கேட்டு கண்டித்துள்ளார். இதில் இருவருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த அர்ஜுனன் வெட்டுக்கத்தியால் நர்சிங் மாணவனை வெட்டினார். இதில் மாணவர் படுகாயமடைந்தார். பின்னர் அக்கம் பக்கத்தினர் மாணவரை மீட்டு குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். இது குறித்த புகாரின் பேரில் அர்ஜுனன் மீது வடசேரி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## தஞ்சாவூர் நாளை நடக்கிறது

# பெரிய கோவில் சித்திரை தேரோட்டம் 14 இடங்களில் நின்று செல்ல ஏற்பாடு



தஞ்சாவூர் ஏப்ரல் 27

தஞ்சாவூர்பெரிய கோவில் தேரோட்டம் நாளை திங்கள் கிழமை நடக்கிறது. 14 இடங்களில் தேர் நின்று செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தஞ்சாவூர்பெரிய கோவில் நடைபெறும் விழாக்களில் சித்திரை திருவிழா வெகு விமர்சையாக நடைபெறும் .இந்த விழா 15 நாட்கள் நடைபெறும் இந்த ஆண்டிற்கான சித்திரை திருவிழா கடந்த 13ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது

தொடக்க விழா நாட்களில் பல்லக்கிலும் சிம்மம், மேஷம், வெள்ளி, மயில், சந்திரபிரபை , முத்து பல்லக்கு, வெள்ளியானை உள்பட பல்வேறு வாகனங்களிலும் சுவாமி புறப்பாடு நடைபெற்று வந்தது. மேலும் தினமும் மாலை 6:00 மணி முதல் இரவு 9 மணிவரைகலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவின் பிரதான நிகழ்ச்சியான தேரோட்டம் நாளை திங்கட் கிழமை நடக்கிறது

இதையொட்டி தேரில் கடந்த 15ஆம் தேதி பந்தல் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது .இதைத் தொடர்ந்து தேருக்கு வார்னிஷ், வர்ணம் பூசி அலங்கரிக்கும் பணி நடைபெற்றது இதன் மூலம் 19 அடி உயரம் கொண்ட தேர் அலங்காரத்தின் மூலம் மொத்தமாக 50 அடி உயரமாக எட்டி உள்ளது சாதாரணமாக 40 டன் எடை கொண்ட இந்த தேர் அலங்காரத்து க்கு பிறகு 43 டன்னாக உயர்ந்து ள்ளது

பெரிய கோயிலில் நாளை காலை 5:00 மணிக்கு தியாகராஜர், ஸ்கந்தர், கமலாம்பாள் புறப்பாடும் முத்து மணி அலங்கார சப்பரத்தில் பஞ்சமூர்த்திகள் புறப்படும் நடை பெற உள்ளது .தேரில் தியாகராஜர் கமலாம்பாள் எழுந்தருளிய பின்னர் காலை5.30 மணிக்கு மேல்6.30 மணி க்குள்திருதேர் வடம் பிடிக்கப் பட்ட உள்ளது

பக்தர்கள் வசதிக்காகவும் தேரில் வரும் சுவாமிக்கு தேங்காய் பழம், பழம் படைப்பதற்காகவும் மேல வீதியில் சந்து மாரியம்மன் கோயில், கொங்கனேஸ்வரர் கோயில், மூலை ஆஞ்சநேயர் கோயில், வடக்கு வீதி பிள்ளையார் கோவில், ரத்னபுரீஸ்வரர் கோயில், குரு குல சஞ்சீவி கோவில், கீழவீதி யில் கொடிமரத்து மூலை, விட்டோ பா கோவில், மணி கர்ணீஸ்வரர் கோயில், வரதராஜ பெருமாள் கோயில் ,தெற்கு வீதியில் கலியுக வெங்கடேச பெருமாள் கோயில், கனரா வங்கி பிள்ளையார் கோயில் ,காசி விஸ்வநாதர் கோயில் , காளியம்மன் கோவில் ஆகிய 14 இடங்களில் தேர் நின்று செல்லும்மே ல வீதியில் உள்ள தேரடியில் இருந்து புறப்படும் தேர் மேல விதி, வடக்கு வீதி ,கீழவீதி, தெற்கு வீதி வழியாக நிலையை சென்று சேரும் மாலையில் தேர் மண்டபத்தில் இருந்து தியாகராஜர் ,கமலாம்பாள் புறப்பட்டு கோவிலில் சென்றடையும் நிகழ்ச்சி நடைபெறும்

இதனிடையே தேரோடும் பாதைகளான மேல வீதி, வடக்கு வீதி, கீழ வீதி ,தெற்கு வீதி ஆகிய பகுதிகளி ல் சாலைகள் பக்தர்களுக்கு ஆன அடிப்படை வசதிகள் ,சுகாதார வசதி உள்ளிட்ட முன்னேற்பாடு குறித்து மாநகராட்சி ஆணையர்கண்ணன் ஆய்வு செய்தார்.






## 100 ஆண்டுகளைக் கண்ட செம்பொன்விளை அரசு தொடக்கப்பள்ளி

# முப்பெரும் விழாவாக கொண்டாடிய முன்னாள் மாணவர்கள்

நாகர்கோவில் ஏப் 27

கன்னியாகுமரி மாவட்டம் செம்பொன்விளை பகுதியிவ் செயல்பட்டு வரும்அரசுதொடக்கப்பள்ளியில்படித்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஆசிரியர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர், என பல துறைகளில் பணியாற்றி வருகின்றனர்

கடந்த 1926 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அரசு பள்ளியில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இன்று வரை தொடர்ந்து தொடக்க கல்வி பயின்று வரும் நிலையில் தற்போது 100 ஆண்டுகளை எட்டி நூற்றாண்டை கொண்டாடுகிறது

நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்த பள்ளியில் 60 ஆண்டுகளுக்கு முன் பயின்ற முன்னாள் மாணவர்கள் ஒன்றிணைந்து பள்ளிக்கு தேவையான பெஞ்ச், டெஸ்க், பீரோ, கம்ப்யூட்டர் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை சீர் வரிசையாக இரண்டு டெம்போ வேனில் ஏற்றி தனது குடும்பத்தினருடன் ஊர்வலமாக பள்ளிக்கு கொண்டு வந்து கொடுத்ததோடு அந்த பள்ளியில் பணியாற்றி தங்களுக்கு கல்வி கற்று தந்து ஓய்வு பெற்ற 90 வயதான மூத்த ஆசிரியர் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்று கொண்டனர்

தொடர்ந்து அந்த பள்ளியில் 70 ஆண்டுகளுக்கு முன் பயின்ற முன்னாள் மாணவர்களையும் வரவழைத்து பொன்னாடை போர்த்தி கவுரவித்தனர். தங்களுடன் படித்த நண்பர்களுடன் தங்கள் குடும்பத்தோடு உரையாடி மகிழ்ந்ததோடு தங்கள் பேரக்குழந்தைகளை வைத்தே விழிப்புணர்வு நாடகங்கள் கலை நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்ந்தனர்.

## நித்திரவிளை அருகே

# ஆஸ்பத்திரி ஊழியர் மீது தாக்குதல்: வழக்கு

மார்த்தாண்டம், ஏப். 27

தூத்தூர் பகுதியை சேர்ந்தவர் சுபித் அந்தோணி (24). சென்னையில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில்வேலைசெய்துவருகிறார்.தற்போது விடுமுறைக்காக சொந்த ஊருக்கு வந்துள்ளார். நேற்று முன்தினம் கடற்கரையில் காற்று வாங்குவதற்காக இரவிபுத்தன் துறையில் உள்ள கடற்கரைக்கு சென்றுள்ளார். அப்போது அவரை வழிமறித்த தூத்தூர் நூலகம் அருகில் வசிக்கும் ராகுல் (24) மற்றும் அதே பகுதியில் உள்ள ஜேக்சன் (24) ஆகியோர் சேர்ந்து சுபித் அந்தோனியை சரமாரியாக தாக்கியுள்ளனர். இதில் படுகாயமடைந்தவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு குழுத்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். இது குறித்த புகாரின் பேரில் நித்திரவிளை போலீசார் ராகுல் மற்றும் ஜேக்சன் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## ஆரல்வாய்மொழி அருகே

# சாலையில் நின்ற டாரஸ் லாரி மீது பைக் மோதல்; 2 பேர் படுகாயம்

நாகர்கோவில், ஏப். 27

ஆரல்வாய்மொழி மிஷன் காம்பவுண்ட் பகுதியை சேர்ந்தவர் தாவீது (30). தனியார் கம்பெனியில் பணியாற்றி வருகிறார். இவரும் இவரது நண்பர் ஸ்டான்லி ஜோஸ் என்பவரும் நேற்று முன்தினம் இரவு 10:30மணிஅளவில்பைக்கில்மூவேந்தர்நகர்பகுதியில் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது அந்த சாலையில் அஜாக்கிரதையாக கவனக்குறைவுடன் டாரஸ் லாரி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த லாரியின் பின்னால் பைக் மோதியது. இதில் பைக் ஓட்டி வந்த ஸ்டாலின் ஜோசப் தலையில் படுகாயம் ஏற்பட்டு, காதுகளில் இருந்து ரத்தம் வடிந்தது. பைக்கின் பின்னால் இருந்த தாவீதுக்கு தலை, முகம் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது.

படுகாயம் அடைந்த இருவரும் வெவ்வேறு தனியார் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டுள்ளனர். இது குறித்து ஆரல்வாய்மொழி போலீசார் விசாரணை நடத்தி கேரளா பதிவு எண் கொண்ட அந்த டாரஸ் லாரி டிரைவர்மீது வழக்கு பதிவு செய்தனர். இதில்ஸ்டாலின் ஜோஸ் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாக டாக்டர்கள் கூறியுள்ளனர்.

# பூவியூர் தேவி முத்தாரம்மன் திருக்கோவில் சித்திரை கொடைவிழா: நாளை தொடங்குகிறது

தென் தாமரை குளம். ,ஏப்.27

பூவியூர் இந்து நாடார் சமுதாயவகை தேவி முத்தாரம்மன் திருக்கோவில் மண்டலபூர்த்தி பூஜை மற்றும் சித்திரை கொடைவிழா நாளை செவ்வாய்க்கிழமை தொடங்கி வியாழக்கிழமை வரை மூன்று நாட்கள் நடைபெறுகிறது.முதல் நாள் விழாவான நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.45 மணிக்கு மஹாகணபதி ஹோமம் மற்றும் தீபாராதனை, காலை 8மணிக்கு கலசபூஜை, தீபாராதனை, 10.30 மணிக்கு பிரம்ம கலச பூஜையும் அதனைதொடர்ந்து தீபாராதனையும் நடக்கிறது, மாலை 4 மணிக்கு கடல் நீராடுதல்,இரவு 7மணிக்கு 1008 திருவிளக்குபூஜை,7.30 மணிக்கு சிற்றுண்டி வழங்குதல்,8மணிக்கு நையாண்டிமேளம், 9.30 மணிக்கு வில்லிசை, 11மணிக்கு சாஸ்தாவுக்கு தீபாராதனை, நள்ளிரவு 12 மணிக்கு சுவாமிக்கு தீபாராதனை, அதிகாலை 2 மணிக்கு பத்திரகாளி அம்மனுக்கு தீபாராதனை,3மணிக்கு முத்தாரம்மனுக்கு தீபாராதனையும் நடக்கிறது.



இரண்டாம் நாளான நாளை மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு நையாண்டிமேளம், 10 மணிக்கு வில்லிசை, நண்பகல் 12 மணிக்கு முத்தாரம்மனுக்கு தீபாராதனை,

12.30 மணிக்கு சமபந்தி விருந்து,

பிற்பகல் 2 மணிக்கு மஞ்சள்மாரி, வெள்ளை மாரி அம்மன் சாமிகளுக்கு தீபாராதனை, மஞ்சள் நீராடுதல்,மாலை 3 மணிக்கு உஜ்ஜைனி மாகாளி அம்மனுக்கு தீபாராதனை,,இரவு 7மணிக்கு செண்டைமேளம்,8 மணிக்கு நையாண்டிமேளம்,10 மணிக்கு வில்லிசை, 1 மணிக்கு தேவி முத்தாரம்மனுக்கு தீபாராதனை,1. 30 மணிக்கு தேவி முத்தாரம்மன் அருளாசி வழங்க சிம்ம வாகனத்தில் வீதி உலா வருதலும் நடக்கிறது.

மூன்றாம் நாளான வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சுடலைமாட சுவாமி மற்றும் காவல் தெய்வங்களுக்கு தீபாராதனை,11 மணிக்கு அன்னதானம்,11.30 மணிக்கு அருள் பிரசாதம் வழங்குதலுடன் விழா நிறைவடைகிறது.விழாஏற்பாடுகளை ஆலய அறங்காவலர் குழுவினர் மற்றும் ஊர் பொதுமக்கள் செய்து வருகின்றனர்

## பார்வதிபுரம் பகுதியில்

# மனநலம் பாதிக்கப்பட்டவர் மீட்பு : நிமிர் குழு நடவடிக்கை

சுசீந்திரம், ஏப்.27

பார்வதிபுரம் பகுதியில் பள்ளி வளாகத்திலுள்ள பொருள்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளிலுள்ள பொருட்களை ஒருவர் திருடி செல்கிறார் என்று நிமிர் குழுவுக்கு பொதுமக்கள் தகவல் தெரிவித்தனர்.

நிமிர் குழு அங்கு சென்று பார்த்த போது அவர் சற்று மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதை அவரது பெற்றோர் மூலம் தெரிந்து கொண்டனர். வயதான அவர்களால் அந்த நபரை பராமரிக்க இயலாததால் நிமிர் குழு,நாம் ஒருவர் அறக்கட்டளையை தொடர்பு கொண்டடு அவரை மீட்டு ஆசாரிப்பள்ளம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அந்த நபரை மீட்கும் பணியில் பெரும் சிரமம் ஏற்பட்ட போது ஆசாரிபள்ளம் காவல் ஆய்வாளர் அந்த நபரை மீட்டு மருத்துவமனையில் அனுமதிக்கும் வரை உறுதுணையாக நின்று நடவடிக்கை மேற்கொண்டார்.அவருக்கும், நிமிர் குழுவுக்கும், நாம் ஒருவர் அறக்கட்டளைக்கும் பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

### பொம்மிடி அருகே
# அரசு பஸ் மீது லாரி மோதல்

தருமபுரி ஏப்ரல் 27

தருமபுரி மாவட்டம் பொம்மிடி அருகே உள்ள பண்டாரசெட்டிப்பட்டியை சேர்ந்தவர் கார்மேகம் (வயது 28) இவர் பொம்மிடி அரசு போக்குவரத்துக்கழக கிளையில் டிரைவராக பணியாற்றி வருகிறார். கடந்த 23ம் தேதி அரசுபஸ்சில் வேலூரில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு சேலம் சென்று கொண்டிருந்தார். சேலம் அரூர் தேசிய நெடுஞ்சாலையில் மஞ்சவாடி கணவாய் வெள்ளையப்பன் கோவில் அருகே காலை பஸ் சென்றது. அப்போது பின்னால் வந்த லாரி எதிர்பாராத விதமாக அரசு பஸ் மீது மோதியது. இதில் பஸ்சின் பின் பக்க கண்ணாடிகள், படிக்கட்டு உடைந்து சேதம் அடைந்தது. அதிர்ஷ்டவசமாக பயணிகள் உயிர்த்தபினர். விபத்து குறித்து பாப்பிரெட்டிப்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து லாரி டிரைவரை தேடி வருகின்றனர்.

### குளச்சல் அருகே
# கோஷ்டி மோதல் 8 பேர் மீது வழக்குப்பதிவு

குளச்சல், ஏப். 27

குளச்சல் அருகே கோடி முனை மீனவர் கிராமத்தை சேர்ந்தவர் சேசு ஆண்டனி (60). இவருக்கும் அதே பகுதியை சேர்ந்த மிக்கேல்ராஜ் என்பவருக்கும் தொழில் போட்டி காரணமாக முன்விரோதம் இருந்து வந்துள்ளது. நேற்று ஏசு ஆண்டனி அவரது நண்பர் சீயோன் என்பவரிடம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த மிக்கேல் ராஜ், ஆண்டனி சேவியர், அவரது மனைவி மேரி அனிதா மற்றும் 2 மகள்கள் சேர்ந்து சேர்ந்து சேசு ஆன்டனியிடம் தகராறு ஈடுபட்டுள்ளனர். மேலும் மேலும் ஆத்திரமடைந்த அவர்கள் சேசு ஆன்டனியை தாக்கி காயப்படுத்தி உள்ளனர். இதை அவரது மனைவி சகாய ஜோஷினி மற்றும் மகன் அருள் தட்டி கேட்டுள்ளனர். அவர்களையும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

தொடர்ந்து இரு தரப்பினரும் தங்களுக்குள் மோதிக் கொண்டனர். இந்த மோதலில் சேசு ஆண்டனி, ஆண்டனி சேவியர், மிக்கேல் உட்பட ஐந்து பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இது குறித்து இரு தரப்பினரும் தனித்தனியாக குளச்சல் போலீசில் புகார் தெரிவித்தனர். போலீசார் இது தொடர்பாக 8 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### புழல் சிறையில் கைதிகளுக்கு இடையே
# கஞ்சா பங்கிடுவது தொடர்பாக தகராறு
## 12 பேர் மீது வழக்குப்பதிவு

சென்னை, ஏப். 27

சென்னை புழல் சிறையில் கைதிகளுக்கு இடையே கஞ்சா பங்கிடுவது தொடர்பாக ஏற்பட்ட தகராறில் 12 பேர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். விசாரணை சிறையில் இருந்த கைதிகள், கஞ்சா பங்கிடுவது தொடர்பாக வாக்குவாதத்தில் ஈடுபட்ட நிலையில் பின்னர் அது கைகலப்பாக மாறியது.

இதனை அறிந்து உடனடியாக விரைந்து சென்ற சிறைக் காவலர்கள், மோதலில் ஈடுபட்டவர்களை கட்டுப்படுத்தி அவரவர் அறைகளில் அடைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக ஆனந்த், சின்னத்தம்பி, ராஜேஷ் உள்ளிட்ட 12 கைதிகள் மீது புழல் காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

பலத்த பாதுகாப்பு நிறைந்த சிறைக்குள், தடை செய்யப்பட்ட கஞ்சா கொண்டுவரப்பட்டது எப்படி? இதற்கு உடந்தையாக இருந்தது யார்? என்பது குறித்து சிறைத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### திருச்சி
# சலூன் கடைக்காரர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை

திருச்சி, ஏப். 27

திருச்சிமாவட்டம்லால்குடிஜெஜெநகர்பகுதியைச் சேர்ந்த சலூன் கடை உரிமையாளர் கண்ணன், குடும்பப் பிரச்சனையால் மனமுடைந்து வெள்ளிக்கிழமை நள்ளிரவு லால்குடி ரயில்வே கேட் தண்டவாளத்தில் சென்னையில் இருந்து தூத்துக்குடி சென்ற ரயிலின் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். தகவலறிந்த விருத்தாச்சலம் ரயில்வே போலீசார் அவரது உடலைக் கைப்பற்றி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்

### மணப்பாறை அருகே
# இளம்பெண் தூக்கிட்டு தற்கொலை

திருச்சி, ஏப். 27

திருச்சி மாவட்டம் மணப்பாறையை அடுத்த காரணிப்பட்டியில் குடும்பப் பிரச்சனை காரணமாக காவ்யா (19) என்ற பெண் வெள்ளிக்கிழமை மாலை வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாகக்கூறப்படுகிறது. கொடும்பாளூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோது அவர் உயிரிழந்தது தெரியவந்தது. வளநாடு போலீஸார் இதுகுறித்து வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மே தினம் கொண்டாட்டங்களுக்கு அனுமதி வேண்டும்: தேர்தல் ஆணையத்துக்கு தொழிற்சங்கங்கள் கடிதம்



சென்னை, ஏப். 27

தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் ம. இராதாகிருஷ்ணன் மற்றும் சிஐடியு பொதுச் செயலாளர் எஸ்.கண்ணன் ஆகியோர் தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் மே தினத்தையொட்டி ஆண்டுதோறும் தொழிற்சங்கங்கள் சார்பில் காலையில் கொடியேற்றுதல், மே தினப் பூங்காவில் அஞ்சலி செலுத்துதல் மற்றும் மாலையில் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்துவது வழக்கம்.

இந்நிலையில் தமிழகத்தில் தற்போது வாக்குப்பதிவு முடிந்துவிட்டபோதிலும், தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குப் பதிவுக்கு முன்னும், பின்னும் பல மதங்களின் திருவிழாக்கள்,

சமூக அமைப்புகளின் செயல்பாடுகள் அனுமதிக்கப்படும் நிலையில், தொழிற் சங்கங்களை மட்டும் அரசியல் கட்சிகளைப் போல அதிகாரிகள் கருதுவது கவலை அளிக்கிறது.

# “ரயில்வேயில் ஆட்குறைப்பு நடவடிக்கை கூடாது” இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்



சென்னை, ஏப். 27

இந்திய ரயில்வேயில் மொத்தப்பணியிடங்களில் இரண்டு விழுக்காடு பணியாளர்களை குறைக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ள நிலையில், இத்தகைய ஆட்குறைப்பு நடவடிக்கைகளை ரயில்வே மேற்கொள்ளக்கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இந்திய ரயில்வேயில் மொத்தமுள்ள பணியிடங்கள் 12 லட்சத்து 80 ஆயிரமாகும். இதில் இரண்டு விழுக்காடு பணியாளர்களை அதாவது 29 ஆயிரத்து 608 பணியாளர்களை குறைக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இது மக்கள் நலனுக்கு எதிரானது. இத் தொழிலாளர் விரோதப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

இந்த ஆட்குறைப்பு நடவடிக்கையால், தெற்கு ரயில்வேயில் மட்டும் ஏறத்தாழ 2,000 பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட உள்ளனர். இது ரயில் பயணிகளின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும். விபத்துகளை தடுக்க உதவாது.

இந்தியாவில் நாள்தோறும் 13 ஆயிரத்து 17 ரயில்கள் உட்பட தினசரி 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரயில்கள் இயக்கப்படுகின்றன. அதற்கேற்ப புதிய பணியிடங்களை உருவாக்கி, நிரந்தர அடிப்படையில் பணியாளர்களை நியமிப்பதற்கு பதிலாக பணி குறைப்பு மேற்கொள்வது என்பது சரியல்ல.

ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என வாக்குறுதி வழங்கிய ஒன்றிய பாஜக அரசு, தற்பொழுது ரயில்வே துறையில் ஆட்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்வதும், வேலை வாய்ப்புகளை ஒழித்துக் கட்டுவதும் அளித்த வாக்குறுதிக்கு நேர் எதிரானதாகும்.

இன்று இந்தியா எதிர்கொள்ளும் முதன்மையான பிரச்சினை வேலையில்லா திண்டாட்டமாகும். இது இளைஞர்கள் மத்தியில் கடும் அதிருப்தியையும், விரக்தியையும், கோபத்தையும் உருவாக்கி உள்ளது.

வேலையில்லா திண்டாட்டத்தால், மது, போதைப் பழக்கம், கொலை, கொள்ளை, தற்கொலைகள், வன்முறைகள் உள்ளிட்ட சமூகச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளன.

வேலையில்லா திண்டாட்டத்தை போக்குவதில் கவனம் செலுத்தாத ஒன்றிய பாஜக அரசு, ஆட்குறைப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது நாட்டின் இளைய தலைமுறையினரின் நலன்களுக்கும், அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சிக்கும் எதிரானதாகும்.

இந்த ஆட்குறைப்பு நடவடிக்கையை உடனடியாக கைவிடுவது மட்டுமல்லாமல், தற்காலிக அடிப்படையில், ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் அனைத்து ரயில்வே பணியாளர்களுக்கும் பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும். புதிய பணியிடங்களை உருவாக்கி நிரந்தர அடிப்படையில் பணி நியமனம் செய்திட வேண்டும். ரயில்வேயை படிப்படியாக தனியார்மயமாக்கும் முயற்சிகளை கைவிட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஒன்றிய பாஜக அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புற்றுநோயால் பாதிக்கப்பட்டவருக்கு டைட்டானியம் உலோகத்தில் செயற்கை மார்பு எலும்பு



சென்னை, ஏப். 27

அரியவகை எலும்பு புற்றுநோயால் பாதிக்கப்பட நபருக்கு டைட்டானியம் உலோகத்தில் தயாரிக்கப்பட்ட செயற்கை மார்பு எலும்பை பொருத்தி கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர். இது தொடர்பாக மருத்துவமனை இயக்குநர் பார்த்த சாரதி, ஒருங்கிணைப்பு அதிகாரி ரமேஷ் ஆகியோர் கூறியதாவது: சென்னையைச் சேர்ந்த 59 வயதான ராமசாமி (பெயர் மாற்றப்பட்டுள்ளது), எலும்புகளில் ஏற்படும் அரிய வகை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சைக்காக சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். புற்றுநோயின் தீவிரத்தால் மார்பு எலும்பு சிதைவடைந்து, இடது பக்கம் உள்ள 6 விலா எலும்புகள் மற்றும் நெஞ்சுப் பகுதி வரை நோயின் தாக்கம் பரவியிருந்தது பரிசோதனையில் தெரியவந்தது.

இதையடுத்து, புற்றுநோய் அறுவை சிகிச்சைத் துறை தலைவர் சுஜய் சுசிகார் தலைமையில் மருத்துவர்கள் சக்தி உஷா தேவி, அருள், அருண் விக்டர், அரவிந்த், வரகுண பாண்டியன், சதீஷ், அருண் குமார் மற்றும் மயக்கவியல் மருத்துவர்கள் கார்த்திகேயன், அருள், சுப்பிரமணியன், பவித்ரா அடங்கிய மருத்துவக் குழுவினர் அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டனர்.

இதில், பாதிக்கப்பட்ட மார்பு எலும்பு. விலா எலும்புகள், அதைச் சுற்றியுள்ள மென்மையான திசுக்கள் அகற்றப்பட்டன. இதனால், அப்பகுதியில் 15 × 10 செ.மீ. அளவுக்கு வெற்றிடம் உருவானது. இதையடுத்து, அவரது உடல் அமைப்புக்கு ஏற்ப, 3 டி தொழில் நுட்பம் மூலமாக டைட்டானியம் உலோகத்தில் பிரத்யேகமாக மார்பு எலும்பு வடிவமைக்கப்பட்டு, பொருத்தப்பட்டது. உடலின் மற்ற பகுதியில் இருந்து திசுக்கள் எடுக்கப்பட்டு மார்பில் வைக்கப்பட்டன. சிகிச்சைக்குப் பிறகு அவர் நலமுடன் உள்ளார்.

அரசு மருத்துவமனைகளில் முதல் முறையாக கிண்டி மருத்துவமனையில் தற்போது இந்த அரிய, சிக்கலான உயர்தர அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனையில் இதை மேற்கொள்ள ரூ.12 லட்சம் வரை செலவாகும். ஆனால், முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மூலம் இலவசமாக செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# புதுக்கடையில் தாலுகா நீதிமன்றம் அமைக்க வேண்டும்; பொதுமக்கள் கோரிக்கை

புதுக்கடை, ஏப்.27

தமிழக அரசு கிள்ளியூர் தாலுகாவில் புதிய மாவட உரிமையியல் உடன் நீதித் துறைநடுவர் நீதிமன்றம் நிறுவ ஏற்கனவே அனுமதித்து அரசாணை பிறப்பித்துள்ளது. இதற்கான முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த நீதிமன்றம் தாலுகாவில் அனைத்துப் பகுதியினரும் வந்து செல்ல வசதியாக தாலுகாவின் மத்திய பகுதியான புதுக்கடையில் அமைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். இது குறித்து அரசுக்கும் நீதித் துறைக்கும் மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் பேரில் நீதித் துறை மற்றும் அரசு துறை அதிகாரிகள் புதுக்கடை பேரூராட்சிக்கு சொந்தமான சமூக நலக் கூடத்தை ஆய்வு செய்து அதில் தற்காலிக நீதிமன்றம் அமைக்கவும் மற்றும் அலுவலகத்தை அக்கட்டிடத்தின் மேல் மாடியில் கட்டிடம் பேரூராட்சி நிர்வாகம் நீதி துறைக்கு ஒப்படைக்கவேண்டும் என்றும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் பேரூராட்சி நிர்வாகம் தீர்மானம் நிறைவேற்றி மேல் மாடி கட்டிடம் கட்ட நிர்வாக அனுமதி கோரி மாவட்ட நிர்வாகத்தை அணுகியது. ஆனால் அதிகார பீடத்தில் இருந்து கொண்டு சிலர் அனுமதி வழங்குதல் தொடர்பாக இடையூறு ஏற்படுத்துவதாக தெரிகிறது.

மேலும் புதுக்கடை அருகே அரசு பொதுப்பணித் துறைக்கு சொந்தமான சுமார் 2 ஏக்கர் காலி நிலம் உள்ளது. அந்த நிலத்தில் நிரந்தர நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில் தாலுகாவின் மத்திய பகுதியான புதுக்கடை பேரூராட்சியில் தற்காலிக நீதிமன்றம் நிறுவ (வாகனம் நிறுத்த வசதியுடன்) அமைவிட தனியார் கட்டிடம் வழங்க தனியார் அமைப்பும் தயாராக உள்ளது.

எனவே புதிதாக நிறுவ உள்ள தற்காலிக / நிரந்தர நீதிமன்றம் கிள்ளியூர் தாலுகாவில் மத்திய பகுதி புதுக்கடையில் அமைய அனைத்து சாத்தியக்கூறுகள் உள்ளது. எனவே அரசு மற்றும் நீதித் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிள்ளியூர் தாலுகா மத்திய பகுதி நீதித்துறை அமைப்பு குழு கோரிக்கை விடுத்துள்ளது.

# மணப்பாறை: திமுக ஒன்றிய செயலாளர் அதிரடி கைது

திருச்சி,

மணப்பாறை திமுக ஒன்றிய செயலாளரும் அமைச்சர் நேருவின் தீவிர ஆதரவாளருமான ஆரோக்கியசாமி நேற்று (ஏப்ரல் 25) காவல்துறையினரால் அதிரடியாக கைது செய்யப்பட்டார். கைதுக்கான காரணம் இதுவரை காவல்துறையால் தெரிவிக்கப்படவில்லை. இதனால் அதிர்ச்சியடைந்த அவரது ஆதரவாளர்கள் மணப்பாறை காவல் நிலையத்தை முற்றுகையிட்டதால் அப்பகுதியில் பரபரப்பு நிலவி வருகிறது

# பென்னாகரம் அருகே விவசாய நிலத்திற்குள் புகுந்த மான் பொதுமக்கள் மீட்டு வனத்துறையிடம் ஒப்படைப்பு

தருமபுரி ஏப்ரல் 27

தரேமபுரி மாவட்டம் பென்னாகரம் அருகே உள்ள கருங்கல்மேடு காடுகள் நிறைந்த பகுதியாகும். இந்த வனப்பகுதியில் ஏராளமான புள்ளி மான்கள் உள்ளன. இந்த நிலையில் இறைத்தேடி ஊருக்குள் வந்த புள்ளி மானை நாய்கள் துரத்தின. மேலும் நாய்கள் மானை கடித்து காயப்படுத்தி உள்ளது. அதனை கண்ட அப்பகுதி பொதுமக்கள் தெரு நாய்களிடமிருந்து மானை மீட்டனர். பின்னர் வனத்துறைக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த வனத்துறையினர் மானை மீட்டு சிகிச்சை அளித்து மீண்டும் வனப்பகுதியில் விட்டனர்.

# திருச்சி: ரயில் மோதி கட்டிட தொழிலாளி பலி

திருச்சி, ஏப். 27

திருச்சி மாவட்டம் லால்குடி அருகே அமராசூர் பகுதியைச் சேர்ந்த 54 வயது கட்டிட தொழிலாளி வைத்தியலிங்கம், நேற்று முன்தினம் மாலை கல்லக்குடி கல்லகம் ரெயில் நிலையங்களுக்கு இடையே ரயில் மோதியதில் உடல் சிதறி உயிரிழந்தார்.

இதுகுறித்து விருத்தாசலம் ரயில்வே இருப்புப் பாதை போலீசார், அவர் தண்டவாளத்தைக் கடந்தபோது ரயில் மோதி இறந்தாரா அல்லது தற்கொலை செய்துகொண்டாரா என விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்சி: ஒரு கோடி மதிப்புள்ள தங்கம் கொள்ளை

திருச்சி, ஏப். 27

திருச்சி பெரிய கடை வீதியில் நகை மதிப்பீடு கடை நடத்தி வரும் உதய் என்பவரின் கடையில், ஊழியர் நித்தின் பணிபுரிந்து வருகிறார். நேற்று காலை, அடையாளம் தெரியாத ஐந்து மர்ம நபர்கள் கடைக்குள் புகுந்து, ஊழியர் உதய்யின்கைகால்களைகட்டிப்போட்டு, சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கக் கட்டிகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். தகவல் அறிந்த காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தப்பி ஓடிய ஐந்து கொள்ளையர்களைப் பிடிக்க தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

# களைகட்டிய கொடைக்கானல் படகு சவாரி



நீலகிரி, ஏப். 27

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கடும் வெப்பம் நிலவி வருகிறது. மேலும் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறையும் அளிக்கப்பட்டுள்ளது.

இதனால் தரைப்பகுதிகளில் நிலவும் வெப்பத்தை சமாளிக்கவும். குளு குளு சீசன் தொடங்கிய நிலையில் 'மலைகளின் இளவரசி'யான கொடைக்கானலுக்கு சுற்றுலா பயணிகள் படையெடுத்து வருகின்றனர். இதனால் நேற்று காலை முதல் அவர்கள் வருகை அதிகரித்து காணப்பட்டது.

இதனால் எங்கு பார்த்தால் மக்களின் தலையாகவே இருந்தது.

இதனால்சீனிவாசபுரம், உகார்த்தேநகர், மூஞ்சிக்கல், ஏரிச்சாலை, பாம்பார்புரம் மற்றும் வனப்பகுதிகளில் உள்ள சுற்றுலா தலங்களுக்கு செல்லும் சாலையிலும் சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் அணிவகுத்து ஊர்ந்தபடி சென்றன.

இதனால் பல்வேறு பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் மிகுந்து காணப்பட்டதால் கொடைக்கானல் நகரமே திக்குமுக்காடி போனது. இதனால் சுற்றுலாப்பயணிகள் மற்றும் உள்ளூர் மக்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாமல் பாதிப்பு அடைந்தனர்.

கொடைக்கானல் மலைப்பகுதியில் பகல் நேரத்தில் 21 டிகிரி செல்சியஸ் முதல் 25 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் நிலவியது. பின்னர் பிற்பகல் முதல் அதிகாலை வரைலேசானகாற்றுடன் கூடிய இதமான குளிரும் நிலவி வருகிறது. இதனை சுற்றுலா பயணிகள் அனுபவித்தனர். மேலும் வனப்பகுதிகளில் உள்ள சுற்றுலா இடங்கள் மற்றும் நட்சத்திர ஏரியில் படகுசவாரிசெய்தும், பூங்காவில் பூத்துள்ள பூக்களைக் கண்டும் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த நிலையில், கோடை விடுமுறையை முன்னிட்டு சுற்றுலா தலங்களில் பொதுமக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். உதகை, கொடைக்கானலில் இதமான காலநிலையில் படகு, குதிரை சவாரி செய்து உற்சாகம் அடைந்து வருகின்றனர்.

கோடை வெப்பத்தைத் தணிக்க நெல்லை மாவட்டம் அகஸ்தியர் அருவியில் ஏராளமானசுற்றுலாப் பயணிகள் குவிந்து நீராடி மகிழ்ந்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.